## நாமக்கல் மாவட்ட கனிம கட்டமைப்பு அறக்கட்டளையின் 2017-18 நிதியாண்டிற்கான ஆண்டறிக்கை

தமிழ்நாடு மாவட்ட கனிம கட்டமைப்பு விதிகள் 2017-ன்படி நாமக்கல் மாவட்ட ஆட்சியரின் செயல்முறை ஆணை எண் ந.க.831/கனிமம்/2017, நாள் 11.09.2017-ன்படி நாமக்கல் மாவட்ட கனிம கட்டமைப்பு அறக்கட்டளை கீழ்குறிப்பிட்டுள்ள அலுவலர்களை அங்கத்தினர்களாகக் கொண்டு உருவாக்கப்பட்ட அறக்கட்டளைப் பத்திரமானது 23.09.2017 அன்று தயார் செய்யப்பட்டு, ஆவண எண் 27/2017, நாள் 28.09.2017-ன்படி 1-இணை சார் பதிவாளர், நாமக்கல் மாவட்ட பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

| வ.எண். | நிர்வாக குழு அமைப்பு | | மேலாண்மை குழு அமைப்பு |
|---|---|---|---|
| 1. | மாவட்ட ஆட்சியர், நாமக்கல் | 1. | மாவட்ட ஆட்சியர், நாமக்கல் |
| 2. | மாவட்ட வருவாய் அலுவலர், நாமக்கல் | 2. | மாவட்ட வருவாய் அலுவலர், நாமக்கல் |
| 3. | உதவி இயக்குநர், புவியியல் மற்றும் சுரங்கத்துறை, நாமக்கல். | 3. | உதவி இயக்குநர், புவியியல் மற்றும் சுரங்கத்துறை, நாமக்கல். |
| 4. | திட்ட இயக்குநர், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை, நாமக்கல். | 4. | திட்ட இயக்குநர், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை, நாமக்கல். |
| 5. | துணை இயக்குநர், சுகாதாரப் பணிகள், நாமக்கல். | 5. | மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர், ஊராட்சிகள் வளர்ச்சி (PAPD), நாமக்கல் |
| 6. | முதன்மைக் கல்வி அலுவலர், நாமக்கல். | 6. | உதவி இயக்குநர், ஊரக வளர்ச்சித்துறை, நாமக்கல். |
| 7. | மாவட்ட கருவூல அலுவலர், நாமக்கல். | 7. | மாவட்ட ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலர், நாமக்கல். |
| 8. | மாவட்ட சமூக நல அலுவலர், நாமக்கல். | 8. | மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாட்டு வாரியம், நாமக்கல். |
| 9. | உதவி இயக்குநர், (ஊராட்சிகள்), நாமக்கல். | 9. | மாவட்ட வன அலுவலர், நாமக்கல். |
| 10. | கேர் அறக்கட்டளை,<br>31, முதல் தெரு, தில்லைபுரம், நாமக்கல். | 10. | முதன்மைப் பொறியாளர், பொதுப்பணித்துறை, கட்டுமானம் மற்றும் பராமரிப்பு, திருச்சி மண்டலம். |
| 11. | வி.பி.ஆர்.சேகர்,<br>த/பெ.ராமசாமி, 23-டி, திருநகர், 2-வது தெரு, மோகனூர் சாலை, நாமக்கல். | 11. | உதவி இயக்குநர், நில அளவைப் பதிவேடுகள் துறை, நாமக்கல். |
| | | 12. | மாவட்ட கருவூல அலுவலர், நாமக்கல். |

| | | | |
|---|---|---|---|
| | | 13. | மாவட்ட சமூக நல அலுவலர், நாமக்கல். |
| | | 14. | துணை இயக்குநர்,<br>(பொது சுகாதார மையப் பொறுப்பாளர்),<br>சுகாதாரப் பணிகள்,<br>நாமக்கல். |
| | | 15. | திரு.ப.ராமசாமி,<br>துணை ஆட்சியர், (ஓய்வு),<br>7/22, வடக்கு மேடு, குப்பம்பாளையம்,<br>என்.புதுப்பட்டி,<br>நாமக்கல். |
| | | 16. | ஜி.விஜயராகவன்.<br>துணை காவல் கண்காணிப்பாளர்,<br>(ஓய்வு), கணபதி நகர், T.N.H.B. எதிரில்,<br>மோகனூர் சாலை, நாமக்கல். |

நாமக்கல் மாவட்ட கனிம அறக்கட்டளைக்காக, ஸ்டேட் பாங்க் ஆப் இந்தியா, நாமக்கல் வங்கியில் கணக்கு எண். 37215312639 துவக்கப்பட்டு சிறு மற்றும் பெருங்கனிமங்களுக்கான உரிமக் கட்டணத்தின் அடிப்படையில் உரிய விதிகளின்படி மாவட்ட கனிம கட்டமைப்பிற்கான நிதி வசூலிக்கப்பட்டுக் கொண்டு வருகிறது.

நாமக்கல் மாவட்டத்தில் 43 பெருங்கனிம சுரங்கக் குத்தகை உரிமங்களும் 155 சிறு கனிம குவாரி குத்தகை உரிமங்களும் நடப்பிலுள்ளன. நடப்பிலுள்ள 43 பெருங்கனிம உரிமங்களும் 12.01.2015-க்கு முன்னர் வழங்கப்பட்டவையாதலால் அவற்றிற்கு உரிமக் கட்டணத்தில் 30% தொகையானது கனிம அறக்கட்டளை நிதியாக வசூலிக்கப்படுகிறது. மேலும் நடப்பிலுள்ள 155 சிறு கனிம குவாரி குத்தகை உரிமங்களில் 78 குவாரி குத்தகை உரிமங்களுக்கு உரிமக் கட்டணத்தில் 30% தொகையும், மீதமுள்ள 77 குவாரி குத்தகை உரிமங்களுக்கு உரிமக் கட்டணத்தில் 10% தொகையும் கனிம அறக்கட்டளை நிதியாக வசூல் செய்யப்பட்டு வருகிறது.

நாமக்கல் மாவட்டத்தில் 59 கிராம ஊராட்சிகள் 3 பேரூராட்சிகள் மற்றும் 1 நகராட்சி ஆகியவைகள் சுரங்கப் பணிகளால் பாதிக்கப்பட்டுள்ள பகுதிகளாக கண்டறியப்பட்டுள்ளன.

நாமக்கல் மாவட்ட கனிம கட்டமைப்பு அறக்கட்டளை நிதியாக 31.3.2018-வரை ரூ.92,60,899/- (ரூபாய் தொண்ணூற்று இரண்டு இலட்சத்து அறுபதாயிரத்து எட்நூற்று தொண்ணூற்று ஒன்பது மட்டும்) வசூலிக்கப்பட்டு அறக்கட்டளை வங்கிக்கணக்கில் வரவு வைக்கப்பட்டுள்ளது. 2017-18 ஆம் நிதியாண்டில் நாமக்கல் மாவட்ட கனிம கட்டமைப்பு அறக்கட்டளை மூலமாக எந்தத் திட்டங்களுக்கும் நிர்வாக ஒப்புதல் ஏதும் வழங்கப்படவில்லை.

| வ.எண். | திட்டத்தின் பெயர் | பணியின் விபரம் | மதிப்பு (ரூபாயில்) | நடைமுறைப்படுத்தப்படுத்தும் அமைப்பு | உயர் முன்னுரிமை / பிற முன்னுரிமைத் திட்டம் |
|---|---|---|---|---|---|
| ஏதுமில்லை | | | | | |

திட்டங்கள் எதற்கும் நிர்வாக ஒப்புதல் வழங்கப்படாததாலும் தொகை ஏதும் ஒதுக்கீடு செய்யப்பட்டு செலவிடப்படாததாலும் 2017-18-ம் ஆண்டிற்கான கணக்குத் தணிக்கை எதுவும் மேற்கொள்ளப்படவில்லை என்கிற விவரம் தெரிவிக்கப்படுகிறது.

தலைவர்,
நாமக்கல் மாவட்ட கனிம கட்டமைப் அறக்கட்டளை
மற்றும்
மாவட்ட ஆட்சியர்,
நாமக்கல்.

ASSISTANT DIRECTOR
GEOLOGY & MINING
NAMAKKAL